அதிமுக தலைமை அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, செப். 24: சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததையடுத்து போலீஸார் அங்கு சோதனையிட்டனர்.

எழும்பூரில் உள்ள காவல் துறை தலைமைக் கட்டுப்பாட்டு அறையின் மின்னஞ்சல் முகவரிக்கு செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வந்த மின்னஞ்சலில், ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும், அது சிறிது நேரத்தில் வெடிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து கட்டுப்பாட்டு அறை போலீஸார், உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்களது உத்தரவின்பேரில், போலீஸாரும், வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்களும் அதிமுக தலைமை அலுவலகத்தில் சோதனை செய்தனர். பல மணி நேரம் நடைபெற்ற சோதனையில், அங்கிருந்து எந்த வெடிபொருளும் கண்டெடுக்கப்படவில்லை.

இதையடுத்து அந்த மின்னஞ்சல், வதந்தியை ஏற்படுத்தும் நோக்கத்தில் வந்திருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக சைபர் குற்றப்பிரிவு போலீஸார், விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பாடல் பதிப்புரிமை வழக்கு

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு எதிரான உத்தரவை ரத்து செய்தது தில்லி உயர்நீதிமன்றம்

நமது நிருபர்

புது தில்லி, செப்.24: 'வீர ராஜா வீரா...' பாடல் தொடர்பான பதிப்புரிமை வழக்கில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு எதிராக தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை தில்லி உயர்நீதிமன்றம் புதன்கிழமை ரத்து செய்து உத்தரவிட்டது.

ரூ.2 லட்சம் அபராதம் மற்றும் ரூ.2 கோடியை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய வேண்டும் என்றும், வீர ராஜா... பாடலை உருவாக்கியதில் தாஹர் சகோதரர்கள் பெயரை அங்கீகரித்து அனைத்து இணைய தளங்களிலும் கொடுக்க வேண்டும் என்றும் தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

'பொன்னியின் செல்வன் 2-ஆம் பாகம்' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள 'வீர ராஜா வீரா' பாடல் என்பது தனது தந்தை மற்றும் உறவினர் ஆகியோர் இயற்றிய 'சிவா ஸ்துதி' என்ற பாடல் ஆகும். எனவே அதற்கு இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என பாரம்பரிய பாடகர் ஃபயாஸ் வசிஃபுதீன் தாஹர் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த தில்லி உயர்நீதிமன்ற தனி நீதிபதி, 'பொன்னியின் செல்வன் படத்தின் வீர ராஜா வீரா பாடல் சிவா ஸ்துதி பாடலைப் போலவே உள்ளது. சிவா ஸ்துதி பாடலால் ஈர்க்கப்பட்டு அதன் உந்துதலால் வீர ராஜா வீரா பாடலை இயற்றியுள்ளதாக ஏ. ஆர். ரஹ்மான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்' என்பதை உத்தரவில் பதிவு செய்தார்.

இதையடுத்து பதிப்புரிமை மீறல் தொடர்பாக ரூ.2 கோடியை தில்லி உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனம் செலுத்த வேண்டும், ரூ.2 லட்சத்தை தாஹருக்கு வழங்க வேண்டும் எனவும் தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

அதனை எதிர்த்து ஏ.ஆர்.ரஹ்மான் தாக்கல் செய்த மனு தில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஹரி சங்கர் மற்றும் ஓம் பிரகாஷ் சுக்லா ஆகியோர் அடங்கிய அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், 'இந்த விவகாரத்தில் ரஹ்மான் தாக்கல் செய்த மேல்முறையீட்டை நாங்கள் ஏற்கிறோம். கொள்கை யளவில் தனி நீதிபதியின் ஆட்சேபணைக்குரிய உத்தரவை நாங்கள் ரத்து செய்கிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், இந்த விஷயத்தில் உரிமை மீறல் அம்சத்திற்குள் செல்ல வில்லை என்று தங்களது உத்தரவில் நீதிபதிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஹண்டேவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு



முன்னாள் அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டேவை, மருத்துவமனையில் புதன்கிழமை சந்தித்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

சென்னை,செப்.24: முன்னாள் அமைச்சர் எச்.வி.ஹண்டேவை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்துப் பேசினார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் புகைப்படங்களை புதன்கிழமை பதிவிட்டு அவர் வெளியிட்ட கருத்து:

திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்த தமது பார்வைகளை முன்வைத்தும், தனிப்பட்ட முறையில் என் மீது அன்பு பொழிந்தும் முன்னாள் அமைச்சர் எச்.வி. ஹண்டே கடிதங்களை எழுதுவார். அவை எப்போதும் எனக்கு ஊக்கமளிப்பவை. 99 வயதிலும் அயராமல் உழைத்து வரும் அவரை, அவரது மருத்துவமனையில் சந்தித்து மகிழ்ந்தேன் என்று தனது பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

38 நாள்களைக் கடந்த போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம்: அரசுக்கு சிஐடியு கண்டனம்

சென்னை, செப். 24: போக்குவரத்துக் கழக ஊழியர்களின் காத்திருப்புப் போராட்டம் 38 நாள்களுக்கும் மேலாக நீடித்துவரும் நிலையில், போராட்டத்தை தமிழக அரசு கண்டுகொள்ளாமல் இருக்கிறது என சிஐடியு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற மற்றும் பணியில் உள்ள போக்குவரத்து ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆக. 18 முதல் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் முன்பு ஊழியர்கள் காத்திருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஊழியர்களுடன் அரசு பேச்சு நடத்த முன்வரவில்லை.

இதனால், ஊழியர்கள் நாள்தோறும் அரை ஆடைப் போராட்டம், மொட்டை அடிக்கும் போராட்டம் என பல்வேறு வகையான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அரசின் நடவடிக்கையைக் கண்டிக்கும் வகையில், சென்னை பல்லவன் சாலையில் உள்ள மாநகர் போக்குவரத்துக் கழக தலைமையகம் அருகே கண், காது, வாயை மூடியிருக்கும் குரங்கு படத்துடன் கூடிய பதாகையையும் அவர்கள் வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர் சங்க (சிஐடியு) பொதுச் செயலர் வி.தயானந்தம் கூறுகையில், 38 நாள்களாக போக்குவரத்து ஊழியர்கள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், இதுவரை தமிழக அரசு அவர்களை அழைத்து பேச்சு நடத்தாமல், கண்டும் காணாமல் இருந்து வருகிறது. இது கண்டனத்துக்குரியது. பேச்சு நடத்தி, கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழக அரசின் முதன்மைச் செயலர் பீலா வெங்கடேசன் காலமானார்



சென்னை, செப். 24: தமிழக அரசின் முதன்மைச் செயலர் பீலா வெங்கடேசன் (56) புதன்கிழமை காலமானார். கடந்த சில மாதங்களாக உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர், சென்னையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

1997-ஆம் ஆண்டு பிகார் மாநிலப் பிரிவில் இருந்து குடிமைப் பணிக்கு பீலா தேர்ச்சி பெற்றார். போஜ்பூர் மாவட்ட உதவி ஆட்சியராகப் பணியைத் தொடங்கிய அவர், மண வாழ்க்கை காரணமாக தமிழ்நாடு மாநிலப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியாக மாறினார்.

இதன்பிறகு, செங்கல்பட்டு சார் ஆட்சியராக தமிழ்நாட்டில் பணியைத் தொடங்கினார். சுகாதாரம், வணிகவரி, கைத்தறி மற்றும் துணிநூல் துறைகளின் செயலராக பொறுப்பு வகித்தார். கரோனா காலத்தில் சுகாதாரத் துறைச் செயலராக பணியாற்றினார். எரிசக்தித் துறை முதன்மைச் செயலராக பணியாற்றி வந்த சூழலில், திடீரென உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டார். கடந்த சில மாதங்களாக மருத்துவமனையிலும், இல்லத்தில் இருந்தபடியும் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த சிகிச்சைகள் பலனளிக்காமல் அவர் புதன்கிழமை உயிரிழந்தார். மறைந்த பீலாவுக்கு இரு மகள்கள் உள்ளனர். பீலாவின் தந்தை வெங்கடேசன் ஓய்வுபெற்ற டிஜிபி ஆவார். தாயார் ராணி, முன்னாள் காங்கிரஸ் கட்சி எம்எல்ஏ. நாகர்கோவிலை பூர்விகமாகக் கொண்ட அவர்கள் பணிநிமித்தம் காரணமாக சென்னையில் குடியேறினர்.

ஆளுநர், முதல்வர் இரங்கல்

சென்னை, செப். 24: அரசு முதன்மைச் செயலர் பீலா வெங்கடேசன் மறைவுக்கு, ஆளுநர் ஆர். என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி: டாக்டர் பீலா வெங்கடேசன், மறைவால் ஆழ்ந்த வருத்தம் அடைந்தேன். அர்ப்பணிப்புள்ள அரசு அலுவலராக குறிப்பாக, கரோனா பெருந்தொற்று காலத்தில் மாநிலத்தின் சுகாதாரத் துறை செயலராக அவர் ஆற்றிய சேவைகள் எண்ணற்ற மக்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது அர்ப்பணிப்பு நிறைந்த பணிகள் பொது சுகாதாரம் மற்றும் அரசு நிர்வாகத்தில் நீடித்த மரபை விட்டுச் சென்றுள்ளன. அவரது குடும்பத்தினர், நண்பர்களுக்கு எனது நெஞ்சார்ந்த இரங்கல்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: பீலா வெங்கடேசனின் மறைவுச் செய்தியால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அடிப்படையில் மருத்துவராக அவர், இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகி, பல்வேறு முக்கியத் துறைகளில் செயலராகப் பணியாற்றினார். கரோனா காலத்தில் சவால் மிகுந்த மருத்துவத் துறை செயலராகப் பொறுப்பு வகித்தார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், அரசு உயர் அலுவலர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.

இதேபோல, தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை உள்ளிட்டோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

NAME CHANGE

I, **B.VAIJAYANTHIMALA** aged 40 years, residing at No.8, Aiswaryam Avenue Phase I, Theethipalayam, Coimbatore - 641 010 shall henceforth be known as **V.VAIJAYANTHIMALA.**

B.VAIJAYANTHIMALA

NAME CHANGE

I, **K. GIRIDHARI PRASATH,** son of Thiru V. Kumarasamy. born on 12th August 1992 (District of Birth: Erode), residing at No. 10/34, Kattur, Pachampalayam, Bhavani, Erode-638 314, shall henceforth be known as **K.S.GIRIDHAR**

K. GIRIDHARI PRASATH

Erode, 3rd June 2022.

கனரா வங்கி Canara Bank

சிண்டிகேட் Syndicate

கோயம்புத்தூர் கணபதி கிளை (2987)-சர்வே எண்.92, கதவு எண்.1C/1, சத்தி ரோடு, ராமகிருஷ்ணாபுரம், கணபதி, போன் : 94890 43518, மின்னஞ்சல் : cb2987@canarabank.com

அசையாச் சொத்து சுவாதீன அறிவிப்பு

[பிரிவு 13(4)]

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் (சட்டம் 54/2002) (இனி 'சட்டம்' என்று அழைக்கப்படும்) (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் மேற்படி சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 பிரிவு 13(12) விதி 3ன்ன் படி, **03.05.2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிட்ட கடன் தொகையான **ரூ.27,05,503.34 (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து ஐந்தாயிரத்து ஐநூற்று மூன்று மற்றும் பைசா மூப்பத்து நான்கு மட்டும்)** அறிவிப்பு தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் : 1.M/s.சீலக்கரை அம்மன் மெட்டல்ஸ், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : (பங்குதாரர் 1-திருமதி.S.ஸ்ரீலா,** க/பெ.சங்கர், **பங்குதாரர்-2.திரு.T.முருகன்,** த/பெ.திருமன்), எண்.254, பாலாழி நகர், 2வது வீதி, மலுமிச்சம்பட்டி, கோயமுத்தூர் – 641 050. **பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :** எண்.5/6, லட்சுமி விநாயகர் கோயில் வீதி, கணபதி புதூர், கோயமுத்தூர் – 641 006. **திருமதி. S.ஸ்ரீலா,** க/பெ.S. சங்கர், **(பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** எண்.254, பாலாழி நகர், 2வது வீதி, மலுமிச்சம்பட்டி, கோயமுத்தூர் – 641 050, **திரு.T.முருகன்,** த/பெ. திருமன் **(பங்குதாரர் மற்றும் உத்தவாதமளித்தவர்),** B 329, பழைய ஹவுசிங் யூனிட், எல்வீஸ் நகர், தாராபுரம் – 638 657, **மேலும் வசிப்பிடம் :** கதவு எண்.5–299, பெத்தாம்பாளையம், கணபதிபாளையம், பல்லடம், திருப்பூர் மாவட்டம் – 641 605, என்பவர்களுக்கு அனுப்பப்பட்டது.

கடன்தாரர், வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது மற்றும் 9வது விதிகளின்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **23.09.2025** தேதியில் கீழேகையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.

இதுமுதற்கொண்டு கடன்தாரர் அல்லது மற்ற பொதுமக்களோ இந்தச் சொத்துக்களில் எந்தவித வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கனரா வங்கிக்கு,** வந்து சேரவேண்டிய கடன் தொகை **31.08.2025 தேதி ரூ.28,66,955.26 (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா இருபத்து ஆறு மட்டும்)** மற்றும் வட்டி, கட்டணங்கள் சேர்த்து வசூலிக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்து விபரம்

ஆவண உரிமையாளர் பெயர் : திரு.T.முருகன், த/பெ.திருமன்–தாராபுரம், SMT வீட்டு வசதித்திட்டத்தின் அனுமதிக்கப்பட்டதும் அதிலடங்கியதுமான நிலம் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா, சித்தராவுத்தம் பாளையம் கிராம மறுசர்வே எண்.388/B பகுதி, வார்டு எண்.7, பிளாக் 14, டவுன் சர்வே எண். 117ல் மனை எண்.MIG-B-329 ல் உள்ள **நிலத்தின் எல்லைகள் :** கிழக்கே : B-328 மனை, மேற்கே : B-330 மனை, வடக்கே: க.ச.எண்.389/2 நிலம், தெற்கே : 7 மீ ரோடு. இவ்வெல்லைகளுக்கான கிழமேல் வடபுறம் 10 மீ, கிழமேல் தென்புறம் 10 மீ, தென்வடல் கிழபுறம் 20.80 மீ, தென்வடல் மேல்புறம் 0.20 மீ. இதனுட்பட்ட 205 ச.மீ நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும், நிறுவப்பட்டவைகளும் சேர்ந்த சொத்து. தாராபுரம் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

தேதி : 23.09.2025 **அதிகாரபூர்வ அதிகாரி**
இடம் : கோயமுத்தூர் **கனரா வங்கி**

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை

நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. **மின்னஞ்சல் :** crmd@cityunionbank.in

போன் : 0435-2432322, **ஃபேக்ஸ் :** 0435-2431746

அசையா சொத்துகளுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) ஆகியவற்றின் கீழ் அசையா சொத்துக்கான விற்பனை அறிவிப்பு.

இந்த அறிக்கையின் மூலம் பொதுமக்களுக்கு குறிப்பாக சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய (1) M/s. சிவசக்தி மார்க்கெட்டிங் பிரைவேட் லிமிடெட், (பிரதிநிதி அதன் நிர்வாக இயக்குநர், S.K. சித்துராஜ்), அலுவலகம் : எண்.90, URC நகர், 1வது தெரு, வீரப்பம்பாளையம், ஈரோடு - 638012. (2) திரு. S.K. சித்துராஜ் (லேட் அண்ணக்கொடியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), த/பெ. A. குப்புசாமி, C5, கருடா ஹோம்ஸ், நஞ்சனாபுரம் ரோடு, திண்டல், ஈரோடு - 638012. மேலும், திரு. S.K. சித்துராஜ் (லேட் அண்ணக்கொடியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), த/பெ. A. குப்புசாமி, எண்.163/6, குமார் ஆர்கேட், 1வது தளம், ஆக்கில் வங்கி கட்டிடம் பெருந்துறை ரோடு, ஈரோடு – 638011. (3) திரு. A. முத்துராமலிங்கம், த/பெ. அழகுபிள்ளை, C3, கருடா ஹோம்ஸ், நஞ்சனாபுரம் ரோடு, திண்டல் ஈரோடு - 638012. மேலும், திரு. A. முத்துராமலிங்கம், த/பெ. அழகுபிள்ளை, எண்.50/5, ராஜா இல்லம், பழையபாளையம், ஈரோடு. (4) திரு. K.S. கோகுல்நாத் (லேட் அண்ணக்கொடியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), த/பெ. S.K. சித்துராஜ், C5, கருடா ஹோம்ஸ், நஞ்சனாபுரம் ரோடு, திண்டல், ஈரோடு - 638012. (5) திரு. S. மணிவண்ணன் (லேட் அண்ணக்கொடியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), த/பெ. S.K. சித்துராஜ், C5, கருடா ஹோம்ஸ், நஞ்சனாபுரம் ரோடு, திண்டல், ஈரோடு - 638012. (6) திருமதி M. சிவகுமாரி, க/பெ. A. முத்துராமலிங்கம், C3, கருடா ஹோம்ஸ், நஞ்சனாபுரம் ரோடு, திண்டல், ஈரோடு - 638012. (7) M/s. கலர் ஸ்டார் டைல் டிரேடிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட், G.M. காம்ப்ளக்ஸ், எண்.19, அகில் மேடு, 6வது தெரு, சேட் காலனி, ஈரோடு - 638001. (8) M/s. ஸ்ரீ அர்த்தநாரி டை கெம் பிரைவேட் லிமிடெட் (பிரதிநிதி அதன் நிர்வாக இயக்குநர் : S.K. சித்துராஜ்), G.M. காம்ப்ளக்ஸ், எண்.19, அகில் மேடு, 6வது தெரு, சேட் காலனி, ஈரோடு - 638001. மேலும், M/s. ஸ்ரீ அர்த்தநாரி டை கெம் பிரைவேட் லிமிடெட் (பிரதிநிதி அதன் நிர்வாக இயக்குநர் : S.K. சித்துராஜ்), எண்.90, URC நகர் 1வது தெரு, வீரப்பம்பாளையம், ஈரோடு - 638012. (9) M/s. SS மார்க்கெட்டிங், எண்.90, URC நகர் 1வது தெரு, வீரப்பம்பாளையம், ஈரோடு - 638012. (10) M/s. சிவசக்தி டெக்ஸ்டைல்ஸ் பிராசஸிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரதிநிதி அதன் நிர்வாக இயக்குநர் : S.K. சித்துராஜ்), G.M. காம்ப்ளக்ஸ், எண்.19, அகில் மேடு, 6வது தெரு, சேட் காலனி, ஈரோடு - 638001. மேலும், M/s. சிவசக்தி டெக்ஸ்டைல்ஸ் பிராசஸிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரதிநிதி அதன் நிர்வாக இயக்குநர் : S.K. சித்துராஜ்), எண்.90, URC நகர், 1வது தெரு, வீரப்பம்பாளையம், ஈரோடு - 638012 ஆகியோரால் பெற்ற கடன் நிலுவைத் தொகை 18-04-2025 அன்றுள்ளபடி ரூ. 23,61,80,558/- (ரூபாய் இருபத்து மூன்று கோடியே அறுபத்தோரு லட்சத்து எண்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்) மற்றும் 19-04-2025 முதல் பின்வட்டி மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள். இதர வைப்புகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு, சிட்டி யூனியன் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும், **சிட்டி யூனியன் வங்கியின்** சொத்தை **அதிகாரப்பூர்வ அதிகாரியால்** நேரடி சுவாதீனம் செய்யப்படுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தானது **"இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்"** மற்றும் **"மாற்று வழங்கப்பட மாட்டாது"** என்கிற முறையில் 17-10-2025 அன்று பிற்பகல் 01.00 மணிக்கு விற்பனை செய்யப்பட உள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,50,00,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்).

செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்பு தொகை: ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்).

மேலே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்க விருப்பம் தெரிவித்த ஏதேதாரரை **ஆங்கர் ஏலதாரராக** அறிவித்து, இந்த ஏலமானது **"சுவில் சேலஞ் முறையில்"** நடத்தப்பட உள்ளது. இந்த நிர்ணயிக்கப்பட்ட ஏல தொகைக்கு மேலே ஏலத்தில் எடுக்க விருப்பமுடைய சவால் ஏலதாரர்கள் தலா **ரூ.1,00,000/-** என்று அதிகரிக்கப்பட்ட கூடுதல் தொகையினை விருப்ப ஏல தொகையாக குறிப்பிட்டு ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. ஆங்கர் ஏலதாரருக்கு சவால் ஏலதாரரின் விருப்ப விலைக்கு மேல் ஏதேனும் உள்ளது. இருந்த போதிலும் இந்த சவால் ஏலதாரருக்கு மீண்டும் ஏலத்தொகையை உயர்த்திக் கேட்க அனுமதி இல்லை. **ஆங்கர் ஏலதாரர்** சவால் ஏலதாரரின் விருப்ப விலைக்கு உயர்த்திக் கேட்ட விருப்பம் இல்லாவிடில் அதிக விலை கோரப்பட்ட சவால் ஏலதாரரின் ஏல விலைக்கு சொத்தானது விற்பனை செய்யப்படும்.

ஆய்வு நாள் : 16-10-2025 (வேலை நாட்களில் மட்டும்) அன்று முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

ஏலத்தில் பங்கேற்பதற்கான விலைப்புள்ளி மற்றும் டேவணித் தொகையை (EMD) செலுத்துவதற்கான கடைசி நாள்: 17-10-2025 அன்று நண்பகல் 12.00 மணி.

ஏலம் நடைபெறும் இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், திருப்பூர் கிளை, எண்.94-94(1), கோர்ட் தெரு, திருப்பூர் – 641601.

உயர்த்தி கோரும் தொகை : ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் விவரம்

ஷெட்யூல் - A : (S.K. சித்துராஜ் மற்றும் லேட் அண்ணக்கொடி ஆகியோருக்கு சொந்தமான சொத்துக்கள் (பிரதிநிதித்துவம் தற்போது அவரது சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள்) S.K. சித்துராஜ், த/பெ. S.K. சுப்புசாமி, S. மணிவண்ணன், த/பெ. S.K. சித்துராஜ், மற்றும் K.S. கோகுல்நாத், த/பெ. S.K. சித்துராஜ் ஆகியோருக்கு சொந்தமான சொத்துக்கள்)

திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை-I துணை பதிவு மாவட்டம். திருப்பூர் தாலுக்கா, திருப்பூர் முனிசிபல் காம்பவுண்டுக்குள், பழைய வார்டு எண்.15, புதிய வார்டு எண்.38, பழைய TS எண்.2, புதிய TS வார்டு "J" தொட்டியாளையம் கிராமம், PS சந்தூர் ரோடு, TS எண்கள் : 1289, 1290, 1291, 1292/1,2, 1293, மனை எண்.11. இதன் வடக்கு போஷன் 2,727 சதுர அடி பரப்பளவில் கட்டப்படாத கூரை வேயப்பட்ட கூரை காலி மனை. எல்லைகள் : M/s. அனிதா எண்டர்பிரைசஸ் காலி மனைக்கு - கிழக்கில். 30 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு ரோடிற்கு - மேற்கில். சித்துராஜ் வாங்கிய சொத்து மனை எண்.11-க்கு - வடக்கில். மனை எண்.10-க்கு - தெற்கில். இதனிடையில், வடக்கு பக்கம் கிழக்கு-மேற்காக 101 அடி. தெற்கு பக்கம் கிழக்கு-மேற்காக 101 அடி. கிழக்கு பக்கம் வடக்கு-தெற்காக 27 அடி. மேற்கு பக்கம் வடக்கு-தெற்காக 27 அடி. மொத்தம் 253.34 சதுர மீட்டர் (2,727 சதுர அடி) காலியிடத்தில் 1,000 சதுர அடிகள் ஒடுகள் வேயப்பட்ட கூரை கட்டிடங்கள் கதவுகள், முன் வீடு மற்றும் மாங்களூர் ஒருவால் கட்டப்பட்டுள்ளன. 735 சதுர அடி பரப்பளவில் சொல்கல் மற்றும் ACC சிமெண்டு வீட் உடன் கூடிய கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மற்றும் முன் மற்றும் பின்புறம் திறந்தவெளியில் 50 HP பவர் மின்சார சேவை இணைப்புடன், எலக்ட்ரிக் பிட்டிங்குகள், டெபாசிட்டுடன் கட்டப்பட்டுள்ளது. குழுநீர் குழாய் இணைப்பு மற்றும் அதன் டெபாசிட் போன்றவை. மேற்படி சுகல சுவர் போன்றவை. கதவு எண். 300/113M, வரி மதிப்பீடு எண். 66139. EB சேவை எண். 208-008-1691, குழுநீர் வரி மதிப்பீடு எண். 131551 வண்டிப்பாதை 30 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு ரோடு போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான உரிமைகள் முதலியவற்றுடன்.

ஷெட்யூல் - J : (A. குப்புசாமி மகன் திரு. S.K. சித்துராஜ்-க்கு சொந்தமான சொத்து)

திருப்பூர் பதிவு மாவட்டம். திருப்பூர் இணை - I துணை பதிவு மாவட்டம். திருப்பூர் தாலுகா, திருப்பூர் டவுன். பழைய வார்டு எண்.15, புதிய வார்டு எண்.38, பழைய TS எண்.2, புதிய TS வார்டு -J, PS சந்தூர் ரோடு, தொட்டியாளையம் கிராமம், TS எண்கள் : 1289, 1290, 1291, 1292/1, 2, 1293, மனை எண்.11-ன் தெற்கு பக்கம். எல்லைகள் : M/s. அனிதா எண்டர்பிரைசஸ் காலி மனைக்கு - கிழக்கில். 30 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு ரோடிற்கு - மேற்கில். மனை எண்.12க்கு - வடக்கில். A.M. வெங்கடேஷனுக்கு சொந்தமான மனை எண்.11க்கு - தெற்கில். இதனிடையில், கிழக்கு-மேற்காக இருபுறமும் 101 அடி. வடக்கு-தெற்காக இருபுறமும் 27 அடி. மொத்தம் 253.34 சதுர மீட்டர் (2,727 சதுர அடி). வீட்டு மனை கதவு எண். 297/113M, வரி மதிப்பீடு எண். 66138 அனைத்து பாதை மற்றும் எளிதாகும் உரிமைகளுடன் கூடிய கட்டிடங்கள்..

அதிகாரப்பூர்வ அதிகாரி விவரங்கள் : செல் எண்கள்.9384811913, 8925964900, மின்னஞ்சல்: crmd@cityunionbank.in

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள : 1) கிளை மேலாளர், **திருப்பூர் கிளை, செல் எண் : 9344206400.** மின்னஞ்சல் : cub066@cityunionbank.in; 2) அதிகாரப்பூர்வ அதிகாரி. செல் எண்கள்.9384811913, 8925964900, மின்னஞ்சல் : crmd@cityunionbank.in

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய சிட்டி யூனியன் வங்கி லிட். நிறுவனத்தின் https://www.cityunionbank.com இணையதளத்தில் உள்ள இணைப்பை பாருங்கள்.

இடம்: கும்பகோணம், **அதிகாரபூர்வ அதிகாரி**
நாள் : 22-09-2025 **சிட்டி யூனியன் வங்கி லிட்.**

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, **CIN** - L65110TN1904PLC001287, **போன் :** 0435-2402322, **ஃபேக்ஸ